23rd January 1961]

THE HON. SRI P. KAKKAN : தேசியப் பெருஞ்சாலை உண்டாக்க வேண்டுமானால் 100 அடி அகலம் வேண்டும். நடுவில் 50 அடி, இரு ஓரங்களிலும் 25, 25 அடி வேண்டும். அதற்கு லாயக்காக இருக்கிற ரோடுகளை தேசியப் பெருஞ்சாலையாக ஆக்க இந்தச் சர்க்கார் முன்வரும். கனம் அங்கத்தினர் சொன்ன பிரச்சனையும் பரிசீலனை செய்யப்படும் என்று சொல்ல விரும்புகிறேன்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, even though the District Boards have made representations to the Government to take up the roads on which buses are running, still the Government have not come forward to take them up. May I know what is the reason for it?

THE HON. SRI P. KAKKAN : After considering all facts, the Government are going to take one by one as State Highways Roads.

SRI M. K. SOMASUNDARAM : சர்க்கார் முதலிலே எடுத்துக் கொள்ள வேண்டிய ரோடுகள் இருக்கின்றன. இருந்தாலும் கூட லோகல் டெவலப்மெண்டு திட்டப்படி போடப்பட்ட ரோடுகள் அழியக்கூடிய முறையில் இருக்கின்றன. அதையாவது முதலில் எடுத்துக்கொள்ள முன் வருவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : ஏற்கெனவே லோகல் டெவலப் மெண்டு, கிராம அபிவிருத்தித் திட்டங்கள், தேசிய விஸ்தரிப்புத் திட்டங்கள் முதலியவற்றின் மூலம் போடப்பட்ட ரோடுகளை சரி செய்வதற்காக 10 லட்சம் ரூபாய் இந்த வருஷம் ஒதுக்கப்பட்டிருக் கிறது.

Subramania Siva

*** 101 Q.—SRI A. VEDARATHNAM :** கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சேலம் ஜில்லாவிலுள்ள பாப்பாரப்பட்டியில் காலம் சென்ற தேசபக்தர் சுப்ரமணிய சிவா அவர்களின் ஞாபகச் சின்னம் ஏற்படுத்தவேண்டுமென்று அவ்வூர் வாசிகள் கோரிக்கை அனுப்பி இருக்கிறார்களா ?

(இ) அப்படியானால், அதன்பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) சுப்ரமணிய சிவா அவர்களுக்கு நினைவுச் சின்னம் நிறுவுவது குறித்துப் பாப்பாரப் பட்டிப் பகுதி மக்களிடமிருந்து, அண்மையில் கோரிக்கை எதுவும் வரவில்லை.

(இ) 1957-ம் ஆண்டில், சுதந்திரப் போராட்ட நூற்றாண்டு விழாவை ஒட்டி, சிவாவுக்கு நினைவுச் சின்னம் அமைக்க அரசாங்கம் உத்தேசித்திருந்தது. பாப்பாரப்பட்டியில் புதிதாகத்

திறக்கப்பட்ட உயர்நிலைப்பள்ளி சிவாவின் ஞாபகார்த்தமாகப் பெயரிடப்பட்டது. அதன் பேரில் வேறு நினைவுச் சின்னம் அமைக்கும் யோசனை மேற்கொள்ளப்படவில்லை.

SRI T. L. SASIVARNA THEVAR : ஒட்டப்பிடாரத்தில் வ.வு.சி. திருப்பூர் குமரன் இவர்களுடைய ஞாபகார்த்தமான கட்டிடத்திற்கு அஸ்திவாரக் கல் நாட்டினார்களே, அது எந்த நிலையில் இருக்கிறது?

MR. SPEAKER : இதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI A. VEDARATHNAM : பாப்பாரப்பட்டியில் அவர் பேரால் நிறுவ இருக்கும் அந்தப் பள்ளிக்கூடத்தில் அவருடைய ஞாபகச் சின்னமாக உருவச் சிலை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா? அதைப்பற்றி யோசிக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : அரசாங்கம் ஒன்றும் அது மாதிரி செய்வதாக இல்லை. தனிப்பட்டவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டால் அதற்கு என்ன உதவி அளிப்பது என்பது பற்றி அரசாங்கம் யோசிக்கும்.

MR. SPEAKER : Questions Nos. 102 and 103 may be taken up together as they relate to the same subject.

Talavadi firka

* 102 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state whether this Government have received any communication from the Chairman, Zonal Council, regarding the merger of the Talavadi firka of Madras State with the Mysore State?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

* 103 *Q*.—SRI S. M. ANNAMALAI : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தளவாடிப் பிர்க்காவை மைசூர் மாநிலத்துடன் சேர்க்கக் கோரி மகசர் வந்ததா?

(இ) அப்படியாயின், அதன் மீது சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) The Government did not consider it necessary to take any action in the matter.

SRI N. K. PALANISAMI : அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் மைசூர் ராஜ்யத்துடன் சேரவேண்டும் என்று வரி கொடா இயக்கம் நடத்துவதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அப்படி